**<u>இரண்டாவது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், நாகர்கோவில்.</u>**

**<u>நாள். 02.09.2024</u>**
**<u>O.S. 133/2019</u>**
**<u>வா.சா.2</u> – தங்கபத்மா**

இடைக்கால மனு எண்.10/2024 அனுமதிக்கப்பட்டதின் பேரில் கூடுதல் ஆவணங்கள் பெறப்பட்டு 20.04.2022 ஆவணம் குறியிடப்படாததால் வாதி வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க வா.சா.2 முதல் விசாரணை தொடர்ச்சிக்காக திறக்கப்பட்டு 20.04.2022 வா.சா.2 ன் மகன் பொன்னிஸ்ராஜ் மருத்துவ ஆவணங்கள் **வா.சா.ஆ 18** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**<u>பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை.</u>**

நான் 8 ம் வகுப்புவரை படித்துள்ளேன். எனக்கு 27 ஆண்டுகளுக்கு முன்பு திருமணம் நடந்தது. என் கணவருக்கு நாசரேத் அவர் பெயிட்டிங் வேலைக்கு செல்வார். நான் வேலை பார்க்கிறேனா என்றால் கடந்த 15 ஆண்டுகளாக என் தம்பி உடன் அவர் திருவிழா சமயம் வளையல் வியாபாரம் செய்து வருகிறேன். செல்லும் போது அவருடன் செல்வேன். என் ஆதார் அட்டையில் என்ன விலாசம் உள்ளது என்றால் என் அம்மா வீட்டு விலாசம் உள்ளது. நான் கடந்த 15 ஆண்டுகளாக என் கணவரை பிரிந்து வாழ்கிறேன். அவ்வாறு என் கணவரை பிரிந்து வாழ்வதை காட்ட ஆவணம் உண்டா என்றால் இல்லை.

நான் என்னையும் என் மகனையும் பிரதிவாதிகள் அடித்து காயப்படுத்தியதாக சொல்லியுள்ளது எந்த ஆண்டு என்றால் 2022 ம் ஆண்டு. அது குறித்து புகார் எதுவும் கொடுத்தேனா என்றால் தென்தாமரைகுளம் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தேன். காயத்திற்காக மருத்துவமனைக்கு சென்றேனா என்றால் முதல் நாள் கன்னியாகுமதி மருத்துவமனைக்கு சென்றோம் முதலுதவி செய்தார்கள். மறுநாள் ஆசாரிபள்ளம் அரசு

மருத்துவமனைக்கு சென்றோம். வேறுயாருக்கும் காயம் உண்டா என்றால் இல்லை எனக்கும் என் மகனுக்கும் மட்டும் காயம்.

நாங்கள் எத்தனை நபர்கள் சென்றிருந்தோம் என்றால் முதலில் நானும் என் மகனும் சென்றிருந்தோம் எங்களை அடித்ததால் பின்னர் என் தம்பி மற்றும் என் சித்தப்பா வந்தார்கள். நாங்கள் எத்தனை நபர்கள் மீது புகர் கொடுத்தோம் என்றால் எட்டு நபர்கள் மீது புகார் கொடுத்தோம். நாங்கள் சென்ற சமயம் அந்த நபர்கள் கோவிலுக்குள் இருந்தார்களா என்றால் இல்லை நாங்கள் சாமிகும்பிட்டு கொண்டிருந்த சமயம் வந்தார்கள். அப்பொழுது கோவில் நடைதிறந்து இருந்ததா என்றால் நாங்கள் தான் நடையை திறந்தோம் பூஜை செய்தோம் நாங்கள் என சொல்வது என் தம்பி, என் சித்தப்பா. அன்றைய தேதியில் அங்கு சென்றதாக சொல்வதற்கு பூஜை செய்ததாக சொல்வதற்கு ஆவணம் உள்ளதா என்றால் இல்லை.

நான் சொன்னது போல் 2022ம் ஆண்டு சம்பவம் நடைபெற்றிருந்தால் முன்னர் சாட்சியளித்த ராஜாதுரை அவர் சாட்சியத்தில் சொல்லியிருப்பார் என்றால் ஆமாம். அந்த சம்பவம் ராஜாதுரை தெரியும். கோவில் கிழக்கு திசையை பார்த்து உள்ளது. கோவில் அருகே இருந்த கோவில் இடிக்கப்பட்டதா என்றால் ஆம் அது புறம்போக்கு சானல். அதனை இடிக்க நடவடிக்கை நாங்கள் தான் எடுத்தோம். அந்த கோவில் இடிப்பதற்கு முன் எத்தனை வருடம் முன்பு கட்டப்பட்டது என்றால் 1919 லேயே கட்டப்பட்டது. எதற்காக அந்த கோவிலில் இடிக்க நடவடிக்கை எடுத்தோம் என்றால் எங்கள் கோவில் பட்டா இடத்தில் உள்ளது அவரது கோவில் புறம்போக்கு இடத்தில் இருந்தது. அவர்கள் எங்களை கோவிலுக்கு போக விடாமல் பிரச்சனை செய்தார்கள். பிரச்சனை பொதுப்பணி துறை வரை சென்றது. அவர்கள் கோவிலை இடித்து விட்டார்கள்.

அரசுக்கு புகார் கொடுத்தது நானா, ராஜதுரையா என்றால் என் சித்தப்பா ராஜதுரை புகார் கொடுத்தார். இடிக்க வேண்டும் என கொடுக்கவில்லை. 7 1/2 சென்ட் என சொல்வது நாங்கள் அளந்து பார்த்தோமா என்றால் கிராம நிர்வாக அலுவலகம் மற்றும் வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் இருந்து வந்து அளந்து பார்த்தார்கள். எங்கள் குடும்பத்தாரின் ஊர் செட்டிவிளை ஆகும். பிரதிவாதிகளின் ஊர் பொற்றையடி ஆகும். கோவில் எங்கு உள்ளது என்றால் பொற்றையடியில் எங்கள் இடத்தில் உள்ளது. எங்களுக்கு எவ்வளவு இடம் உண்டு என்றால் 50 சென்ட் கிட்ட உண்டு. என் அப்பா அவர் உடன் பிறந்த சகோதரர்கள் நான்கு பேருக்கும் தலா 5, 5 சென்ட்.

என் தாத்தாவின் அப்பா பெயர் பொன்னாயுதம். என் தாத்தா பெயர் தங்க நாடார். அவ்வாறு கிட்டத்தட்ட 50 சென்ட் என காட்ட என்ன ஆவணம் உண்டு என்றால் கிரய பத்திரம் எல்லாம் இருக்கிறது தாக்கல் செய்துள்ளோம். நீதிமன்றத்தில் தாக்கல் செய்த ஆவணங்களை தவிர வேறு ஆவணங்கள் இல்லை என்றால் என் சித்தப்பாவிடம் இருக்கும்.

இந்த வழக்கு தாக்கல் செய்யும் சமயம் நான் தரப்பினராக இருந்து கையொப்பம் போட்டுக் கொடுக்கவில்லை. பொன்னாயுதத்திற்கு எத்தனை வாரிசுகள் என்று எனக்கு தெரியாது. தங்கநாடாருக்கு நான்கு ஆண் மக்கள் இரண்டு பெண் மக்கள். அந்த ஆறு பேரும் 2013ம் ஆண்டு பாகபத்திரத்தில் கட்சி சேர்ந்தார்களா என்றால் எனக்கு தெரியவில்லை. என் நிரூபண வாக்குமூலத்தில் 2013 பாகப்பிரிவினை ஆவணம் குறித்து விபரம் எனக்கு யார் சொன்னது என்றால் பாகப்பிரிவினை ஆவணம் எழுதிய போது எனக்கு தெரியாது. பின்னர் உட்பிரிவு செய்யப்பட்டு அனுபவித்த விபரம் எனக்கு தெரியும்.

என் தாத்தா தங்கநாடார் சொத்து ஏதும் விலைக்கு வாங்கினாரா என்றால் கோவில் இருக்கும் இடம் விலைக்கு வாங்கியதாக சொல்வார்கள்.

செட்டிவிளையில் சொத்து வாங்கியுள்ளார். என் தாத்தா விலைக்கு வாங்கிய சமயத்தில் கோவில் இருந்ததா என்றால் எனக்கு தெரியாது. நான் பொன்னாயுதம் சொத்து என்றும் என் தாத்தா விலைக்கு வாங்கியதாகவும் இருவேறு விதமாக சொல்வதில் எது உண்மை என்றால் என் தாத்தா தான் விலைக்கு வாங்கியதாக சொல்வார்கள். என் தாத்தா விலைக்கு வாங்கியதாக சொல்வதால் கோவில் இருப்பது அந்த விலையாதாரத்தில் தெரிய வரும் என்றால் ஆம்.

பி.வா.சா.ஆ1 புகைப்படங்களில் நான் இருக்கிறேனா என்றால் நான் இல்லை. பி.வா.சா.ஆ1 புகைப்படங்களில் இருக்கும் கோவில் தான் நான் சொல்லக்கூடிய கோவில் என்றால் சரிதான். நான் 2022ம் ஆண்டு கோவிலுக்கு சென்று சம்பவம் நடைபெற்றதாகவும் சொல்வது 2019ம் ஆண்டே இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டு இடைக்கால உறுத்துக்கட்டளை மனு தள்ளுபடி செய்யப்பட்ட பின் இந்த வழக்கிற்காக நான் பொய்யாக ஜோடனை செய்து கூறுவது என்றால் சரியல்ல. என் நிரூபண வாக்குமூலத்தில் 18 பீடங்கள் என சொல்லியுள்ளது என்னென்ன பீடங்கள் என்றால் பிரதான பீடமானது 1919ல் என் சித்தப்பா ராஜதுரை இசக்கியம்மனுக்கு கட்டியதாகும். மற்றொரு பீடம் மாரியம்மனுக்கு என் சித்தப்பா சந்திரசேகர் கட்டியதாகும். செங்கடாகரன் பீடம், நாராயண சாமி ஐயா பீடம், சாஸ்தா பீடம், மற்றுமொரு இசக்கியம்மன் பீடம், பத்திரகாளியம்மன் பீடம், வேதாள பீடம், சுடலைமாடன் பீடம், ஏனைய பீட விபரங்கள் எனக்கு தெரியாது.

கோவிலில் கருங்கல்லாலான கல்வெட்டு இருந்ததா என்றால் ஒரே கல்வெட்டு தங்கநாடார் வகையறா கல்வெட்டு என இருந்தது அதனை உடைத்து அதன் மீது சாயம் பூசிவிட்டார்கள். அந்த கோவிலுக்கு மின் இணைப்பு உண்டு அது என் அப்பாவின் அம்மா பத்மாவதியின் பெயரில் உள்ளது. கோவிலுக்கு கட்டிட எண் உண்டா என்றால் இல்லை புல எண் தான் 219/1ஏ ஆகும். திருவிழா காலங்களில் சாமிதரிசனத்திற்கு செட்டிவிளை மற்றும்

பக்கத்து ஊரில் இருந்து நிறைய நபர்கள் வருவார்கள். பொற்றையடி ஊர் பொதுமக்களும் வருவார்கள்.

2018ம் ஆண்டு நாங்கள் கோவில் கொடை கொடுத்தோம். எதிர்தரப்பினர் அசிங்கமாக பேசி என் தம்பி சித்தப்பி ஆகியோர்களை அடித்து விட்டார்கள். ஸ்டேசனில் புகார் கொடுத்தோம். 2018ம் ஆண்டு கோவில் கொடை நடந்தது. 2018ம் ஆண்டு என் சித்தப்பா மற்றும் என் தம்பிக்கு காயம் ஏற்பட்டது என்ன காயம் என்று எனக்கு தெரியாது. கல்வெட்டு உடைத்ததாக சொல்வது 2019ம் ஆண்டு கோவில் குடைக்கு பின்பு நடந்தது.அவ்வாறு உடைத்ததாக சொல்வதை காட்டுவதற்கு ஆவணம் எதுவும் தாக்கல் செய்ய முடியுமா என்றால் எல்லா ஆவணமும் என் சித்தப்பா வசம் தான் உள்ளது.

2019ம் ஆண்டு உடைத்ததாக சொல்வதும் அவ்வாறு உடைந்த நிலையில் இன்று தேதிவரை இருப்பதாக காட்டவும் ஆவணங்கள் எதுவும் உண்டா என்றால் என் சித்தப்பாவிடம் உண்டு. நான் கோவிலில் சாமியாடுவது அவ்வாறு சாமி ஆடுவது பொய் சாமி என என்னை கிண்டல் செய்ததாக நான் சொல்லியது பொய் என்றால் சரியல்ல. நான் 2022ம் ஆண்டு வாகனம் வாங்கியதாக காட்ட எந்த ஆவணமும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வாகனத்தை அடித்து சேதப்படுத்தியதாக காட்ட எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் ஆம். வா.சா.ஆ18ல் நான் சொல்வது போல் என் மகனுக்கு கண்ணில் காயம் பட்டதாக குறிப்பிடப்படவில்லை என்றால் சரியல்ல.

வா.சா.ஆ18ல் இரும்பு கம்பிளை எடுத்து என்னையும் என் மகனையும் தாக்கியதாக சொல்லியுள்ளது துலங்காது என்றால் சரியல்ல. வா.சா.ஆ18 ஆவணம் மருத்துவமனையில் சேர்ந்தால் சாதாரணமாக கொடுக்கும் ஆவணம் என்றாலும் நான் சொல்லியது போல் எந்த காயமும் இல்லை என்றால் சரியல்ல. நான் உண்மையில்லாமல் சம்பவத்தை மிகைப்படுத்தி சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. என் உறவினர்கள் காவல்துறையில் உயர் பதவியில் இருப்பதால் அவர்கள் செல்வாக்கை பயன்படுத்தி பிரதிவாகளிடம் இருந்து

கோவிலை கைப்பற்ற முயற்ச்சித்தோம் என்றால் சரியல்ல. எங்கள் உறவினர்கள் காவல்துறை உயர் பதவியில் இருப்பதால் பிரதிவாதிகளை கஷ்டப்படுத்த பல பொய் புகார் கொடுத்த வழக்கு பதிந்துள்ளோம் என்றால் சரியல்ல. 2018ம் ஆண்டுக்கு முன் நாங்கள் கோவில் கொடை நடத்தியதை காட்ட ஆவணம் ஏதும் உள்ளதா என்றால் இல்லை கோவில் கொடை நடத்தியிருந்தோம்.

கோவில் உண்மையில் எங்கள் வசம் இருந்திருந்தால் நாங்கள் அரசு அதிகாரிகளை பயன்படுத்தி கோவிலின் ஒரு பகுதியை உடைத்திருக்க மாட்டோம் என்றால் சரியல்ல. நீதிமன்ற ஆவண எண் ஆணையர் அறிக்கையுடன் தாக்கல் செய்த புகைப்படத்தில் ஒரு கல்வெட்டு இருப்பதாக தெரிகிறது அதில் சாயம் பூசியதாக தெரியவில்லை என்றால் சரிதான். மற்றொரு புகைப்படத்தில் கோவிலில் ஒரு பகுதி உடைத்ததாக காணப்படுவது எதிர்பார்ட்டி உடைத்ததாகும். அந்த பகுதி 2018ம் ஆண்டு கோவில் கொடைக்கு பின் உடைத்தது. இந்த வழக்கிற்கு வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பா, பின்பா என்றால் நினைவில்லை. நான் சொல்வது போல் பூஜையோ, கொடை விழாவோ நடத்தியது இல்லை என்றாலும் இந்த வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. கோவில் கட்டு மானங்கள் கட்டியிருந்தால் அந்த விபரங்கள் எங்களிடம் இருந்திருக்கும் என்றாலும் நாங்கள் கட்டாததால் அந்த ஆவணம் எங்கள் வசம் இல்லை என்றாலும் சரியல்ல.

என் உறவினர் மகேஷ் தினத்தந்தி நாளிதளில் செய்தியாளராக உள்ளால் என்றால் சரிதான். அவர் செல்வாக்காகல் நாங்கள் பல புகார் கொடுத்துள்ளோம் என்றால் சரியல்ல. வா.சா.ஆ 17ல் கோவில் மற்றும் சாமி சிலைகள் இருப்பது தெரியவராது என்றால் சரிதான். வா.சா.ஆ 11 குறித்து எனக்கு எதுவும் தெரியாது. வா.சா.ஆ 12 பட்டா குறித்து எனக்கு தெரியாது என் சித்தப்பா தான் கொடுத்தது. என்னை தாக்கியதாக சொல்வதற்கு முதலில் காவல்நிலையத்தில் புகார் கொடுத்துவிட்டு தான் மருத்துவமனை சென்றேன். வா.சா.ஆ 14 புகார் 2024ம் ஆண்டு 4ம் மாதம் கொடுத்தோம். வா.சா.ஆ 14 புகாரில் கோட்டாட்சியர் உத்தரவு

கொடுத்ததாக சொல்லியுள்ளது என்றைய தேதி என்ன உத்தரவு என்று ஞாபகம் இல்லை. இந்த வழக்கு தாக்கல் செய்தபின் கோட்டாட்சியர் உத்தரவு வழங்கினார்.

அந்த கோட்டாட்சியர் உத்தரவின் பேரில் நான் அங்கு சென்றேன் என்றால் வா.சா.ஆ 14 ல் அவ்வாறு எழுதியுள்ளது. நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் என் சாட்சியத்தில் எந்த உண்மையும் இல்லை என்றாலும் சரியல்ல.